# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 24.11.2022 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கூட்டப்படவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத் துணைத் தலைவர், நகர் மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் திருமதி மீனா (எ) ஜீ.வி. பாக்கியலட்சுமி முன்னால் நகரமன்ற துணைத்தலைவர் அவர்கள் காலமானதற்கு இரங்கலைத் தெரிவித்து நகர்மன்ற தலைவர் நகர்மன்ற துணைதலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>தீர்மானம் எண் : 486<br><br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 2 | மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 3.07.2022 அன்று நாமக்கல்லில் நடைபெற்ற நகர்புற உள்ளாட்சி பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொள்ள வருகை புரிந்தமைக்கு தினமணி கோவை பதிப்பகம், தினமணி தர்மபுரி மற்றும் நாமக்கல் பதிப்பகம் தினந்தந்தி கோவை மற்றும் நாமக்கல் பதிப்பகத்தில் விளம்பரம் செய்தமைக்கு பட்டியல் ரூ.3,21,720/-க்கு வரப்பெற்றுள்ளது. எனவே பட்டியல் தொகையினை Graphic Arts Indistries க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்தில் விளம்பரம் செய்யப்பட்டதையும், அதற்காக ஏற்பட்ட செலவுத் தொகை ரூ.3,21,720/-ஐ வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br><br>தீர்மானம் எண் : 487<br><br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 3 | இந்நகராட்சியில் 2022 - 2023ம் ஆண்டிற்கான வரி மற்றும் வரியில்லா இனங்களை 100% நிலுவையின்றி வசூல் செய்யவும், நிலுவையின்றி செலுத்த பொதுமக்கள் வசதிக்காக மென்பொருள் இணையதள செயலி "TNUrban Esevai" (UTIS Mobile App) மூலமாக செலுத்தலாம் என்ற அறிவிப்பினை ஆட்டோவில் ஒலி பெருக்கி அமைத்து விளம்பரம் செய்ய மேலும் அவ்வறிவிப்பினை தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்ய மற்றும் பதாகை (baner) வைக்க , உத்தேச செலவினமாக ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வரி மற்றும் வரியில்லா இனங்களை வசூலிக்க வேண்டிய அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுத்ததை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1751/2022/அ2<br><br>தீர்மானம் எண் : 488<br><br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய போதிய ஆட்கள் இல்லாததால் இப்பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள 21 நபர்களுக்கு நகர்மன்றத் தீர்மானம் எண் 378 நாள் : 28.06.2022 மூலம் அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு.எம்.வேலுசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்த காலம் 31.10.2022 அன்று முடிவடைகிறது.<br><br>எனவே, குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று ஏற்கனவே இப்பணிகளை மேற்கொண்டு வருகிற திரு.எம்.வேலுசாமி ஒப்பந்ததாரர் 01.11.2022 முதல் 89 நர்டகளுக்கு அதே விலை விகிதத்தில் பணி நீடிப்பு செய்து குடிநீர் பணிகளை மேற்கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : 268/2022/இ1<br><br>தீர்மானம் எண் : 489<br><br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 5 | அரசாணை (நிலை) எண் : 43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.தபு-1) துறை நாள் : 22.07.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் : 17404/22/M1, நாள் : 02.11.2022யின் படி அரசு தொடக்கப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்க்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை சிற்றுண்டி வழங்கவும், அச்சிற்றுண்டியை குழந்தைகளுக்கு பரிமாறும் நபர்களுக்கு மாதம் ரூ.1500/-ஐ வழங்க உத்திரவு வரப்பெற்றுள்ளது எனவே, 100 குழந்தைகளுக்கு ஒருவர் வீதம் மொத்தம் 14 நபர்களுக்கு 15.09.2022 முதல் 31.03.2023 வரை ரூ.1,36,500/-ஐ மேற்படி பள்ளிகளில் உணவு பரிமாறும் நபர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (மாதம் ஒன்றிக்கு 14 நபர்களுக்கு ரூ.1500 வீதம் மொத்தம் 21,000/-)<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பள்ளிக் குழந்தைகளின் நலனை கருதி, அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு பரிமாறி 14 நபர்களுக்கு செப்டம்பர் மாதம் 15 நாட்களுக்கும் அக்டோபர் மாதம் 31 நாட்களுக்கும் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 1653/2022/இ1<br><br>தீர்மானம் எண் : 490<br><br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 6 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் (2018 - 2019) உரக்கிடங்கு பகுதியில் நுண்ணுயிரி உரமாக்குதல் மற்றும் நெல்லித்துறை மயானம் பகுதியில் நுண்ணுயிரி உரமாக்குதல் பணிக்கு ஒப்பந்ததாரர் திருவாளர் திருமுருகன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் 29/09/2018 செலுத்திய கீழ்க்கண்ட தொகைகள்<br><br>EMD - முன்வைப்புத் தொகை ரூ. 55300<br>EMD - முன்வைப்புத் தொகை ரூ. 66800<br>FSD - பிணை வைப்புத் தொகை ரூ. 45400<br>FSD - பிணை வைப்புத் தொகை ரூ. 57500<br>மொத்தம் ரூ.2,25,000<br><br>திரும்ப வழங்க கோரியுள்ளார். வைப்புத் தொகை பதிவேடு 2022 - 2023 (2018 - 2019) நடப்பு ஆண்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண் 2,3ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை திரும்ப வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.553/2021/இ1<br><br>தீர்மானம் எண் : 491<br><br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

**7** மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் தற்போது இந்நகராட்சியில் 20800 குடியிருப்புகள் உள்ளன. எனவே 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 68 பணியாளர்களை எஸ்.எஸ்.பவுண்டேசன் மூலம் 12.09.2022 முதல் 29.11.2022 வரை 79 நாட்களுக்கு பணிமேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டு 29.11.2022ம் தேதியில் முடிவடைவதால் மேற்கண்ட நிறுவத்திற்கே 30.11.2022 முதல் 89 நாட்களுக்கு தொடர்ந்து பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 492

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**8** மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் பம்பின் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய்கள் உடைப்பு சரிசெய்யவும். பழுதான பொதுக்குழாய்கள் பைப் மாற்றவும், பொது கழிப்பிடங்களுக்குத் தேவையான பைப் சமான்கள் விநியோகம் செய்து மாற்றம் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கவும்.

தீர்மானம் எண் : 493

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**9** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN40F 2273 (Septic Tanker Lorry) வாகனத்தின் பேட்டரி பழுது ஏற்பட்டுள்ளதால் புதிய பேட்டரி ஒன்று வாங்கி பொருத்த ஆகும் தோராய செலவினம் ரூ.15,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 494

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**10** மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி 2022- 2023ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 18.11.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பம்பிங் மெயின் பகிர்மானக் குழாய் உடைப்பு சரி செய்தல் பணி | ரூ.5.00 | திரு. எம். வேலுசாமி | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.சி.நாகராஜ் | 4.96 % மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் நீர்மூழ்கி மோட்டார்கள் பழுதானதை காயில் ரிவைண்டிங் மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.5.00 | திரு. எம். வேலுசாமி | 0.06 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.சி.நாகராஜ் | 4.96 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் : 495

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான சிராஜ் நகர் பகுதியில் இயங்கி வரும் நகராட்சி உரக்கிடங்கில் Bio Methanation plant உள்ளது. இவ் உரக்கிடங்கினை கடந்த 24.09.2022 அன்று கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. அப்பொழுது Bio Methanation plant யினை உடனடியாக செயல்பாட்டிற்கு கொண்டு வரும்படி உத்திரவிடப்பட்டது. இதனையடுத்து Bio Methanation plant மோட்டார்கள், Shledder Machine Digerter ஆகியவற்றை உடனடியாக பழுது நீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளது. இதனால் இப்பணிக்கு ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 496<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண்.21 கெண்டையூர் சாலையில் உள்ள கருப்பராயன் கோவில் பகுதியில் பொதுமக்கள் தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால் சிரமம்படுகிறார்கள். எனவே அவ்விடத்தில் உள்ள பழைய ஆழ்துளை கிணற்றில் புதிய மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1651/2021/இ1<br>தீர்மானம் எண் : 497<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று குடிநீர் திட்டங்களில் ஆற்று நீரை ராவாட்டரை (Raw water) எடுத்து வடிதளங்கள் மூலம் சுத்தம் செய்து, சுத்த நீராக (Clean Water) மாற்றி மேல்நிலை தொட்டிகளில் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது பெய்து வரும் மழையால் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு செம்மண் கலந்து வருவதாலும் கடின தன்மை அதிகமாக இருப்பதாலும் ஆற்று நீரின் அழுக்கை நீக்க (Lerbility) படிகாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது படிகாரம் கையிருப்பு குறைவாக இருப்பதாலும் இனிவரும் மழைகாலங்களில் படிகாரம் கூடுதலாக தேவைப்படுவதாலும் 20டன் படிகாரம் வாங்க உத்தேச செலவினம் ரூ.3,60,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2899/2022/இ1<br>தீர்மானம் எண் : 498<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண்.26 சின்னம்மா லே அவுட் குறுக்குத் தெரு சாலையில் மின்கம்பம் எண்.2 பொது மக்கள் போக்குவரத்திற்கு சாலையில் இடையூராக இருப்பதை சாலையின் ஓரம் இடம் மாற்றி அமைக்க மதிப்பீடு கட்டணம் ரூ.22730/-யினை மின்வாரியத்திற்கு செலுத்த மின்வாரிய கேட்பு அறிக்கை வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி மதிப்பீட்டு தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ஆவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மின்வாரிய அலுவலகத்திற்கு தொகை ரூ.22730/-ஐ செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.0294/2020/இ1<br>தீர்மானம் எண் : 499<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 16ல் எம்.எஸ்.ஆர்.புரம் பகுதியில் உள்ள புதிய மக்கள் நலமையம் கட்டப்பட்டு முடிக்கும் தருவாயில் உள்ளது. இதற்கு முன்புறம் உள்ள நுழைவாயில் அமைக்கும் பணிகள் மற்றும் மையத்தின் பாதுகாப்பு கருதி இருபுறமும் Design வேலைப்பாடுகள் அமைக்க வேண்டியுள்ளது. இதனால் இதற்கு இப்பணிகள் மேற்கொள்ள ரூ.4.00 இலட்சத்திற்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 500<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 16 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் நகர்மன்றத் தலைவர் அவர்கள் பயன்படுத்தும் ஸ்கார்பியோ ஈர்ப்பு வாகனத்திற்கு நெம்பர்பிளேட், ஸ்டிக்கர் கால்மிதி ஆகியவை மற்றும் இதர பொருள்கள் பொருத்தவு ஆகிய உத்தேச செலவினம் ரு.30.000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 501<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 17 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 1 ல் உள்ள ரகுமானியா கார்டன் பகுதியில் உள்ள மழைநீர் கால்வாய் முற்றிலும் பழுதடைந்துள்ளது. இதனால் கழிவுநீர் சாலையில் தேங்கி தொற்று நோய் பரவும் அபயாம் உள்ளது. இதனால் இப்பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்க ரூ 3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கபட்டு பணிகள் பொதுநிதியால் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 502<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 18 | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண் 22 பெருமாள் வீதி 2 சாலையில் அமைந்துள்ள மின்கம்பம் எண் 21 மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் மழைநீர் வழகால் கால்வாய் உள்ளே மின்கம்பம் அமைந்துள்ளதால் கழிவுநீர் தேங்கி நிற்கிறது. எனவே மேற்படி மின்கம்பத்தை மாற்றி அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண் : 503<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

## மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சிறப்புக்கூட்டம் 24.11.2022 ஆம் தேதி வியாழக்கிழமை மதியம் 12.00 மணிக்கு கூட்டப்படவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத் துணைத் தலைவர், நகர் மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

| | |
|---|---|
| 1 | மாண்புமிகு தமிழக முதல்வரின் அறிவிப்பிற்கிணங்க மேட்டுப்பாளையத்திலிருந்து சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ள விளாமரத்தூர் என்ற கிராமத்தில் இருந்து தூய்மையான குடிநீர் எடுக்கவும். குடிநீரை குழாய்கள் மூலம் சாமண்ணாநகர் கொண்டு வந்து சேர்க்கவும், தலைமை நீரேற்று நிலையத்தில் சுத்திகரிப்பு செய்து நகரில் மேல்நிலைத் தொட்டிகளுக்கு நிரப்பட்டு நல்ல நிலையில் குடிநீர் வழங்கவும். மேற்படி குடிநீர் திட்டத்தை செயல்படுத்த அரசுக்கு பரிந்துரை செய்ய இந்நகராட்சியில் 28.03.2022 அன்று நடைடிபற்ற முதல் நகர்மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.<br><br>மேலும் மின்சாரம் மதுவிலக்கு அமைச்சர் மற்றும் நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரையின்படி மேற்காணும் பணிக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் மூலம் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தை செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என 06.05.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்டது. 24.09.2022 அன்று அரசு கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் மேட்டுப்பாளையம் நகராட்சி ஆய்வின்போது மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு விளாமரத்தூர் பகுதியிலருந்து குடிநீர் எடுக்கப்படும் திட்டத்திற்கான இடம் மற்றும் சாத்தியகூறுகள் குறித்து ஆய்வு செய்யுமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுக்கு உத்திரவிடப்பட்டதையடுத்து 13.10.2022 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களால், நகர்மன்றத் தலைவர், நகர்மன்றத் துணைத் தலைவர், நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் ஆகியோருடன் கூட்டாய்வு செய்யப்பட்டது. அதில் மூன்று இடங்கள் (குண்டு பள்ளம், தொண்டாமுத்தூர் நீர் எடுக்கும் இடம், கஞ்சிப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள ஒடமடவு) ஆய்வு செய்யப்பட்டு, விளாமரத்தூர் கஞ்சிப்பிள்ளையார் கோவில் அருகில் ஒடமடவு என்ற இடத்தில் குடிநீர் எடுக்க நகராட்சி மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களால் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு தொழில்நுட்ப ஆலோசர் (Consultant) மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், இதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மற்றும் இவ்விரிவான திட்ட அறிக்கையினை அரசுக்கு அனுப்பி உரிய நிதியினை பெற மேல்நடவடிக்கையினை தொடரவும் மன்றத்தின் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>தீர்மானம் எண் : 504<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |